1973 நவம்பர் 28]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** திருப்பூரில் 66 கிலோவாட் சப்-ஸ்டேஷனுக்குப் பதிலாக ரூ. 20 லட்சம் செலவிலே, 110 கிலோ வாட் சப்-ஸ்டேஷன் நிறுவ வேலை நடந்து வருகிறது. சனவரியில் அந்த வேலை முடிவடைந்துவிடும். விரைவில் நிலைமை சீரடைந்து விடும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மின்சார வேஸ்டேஜ் ஜாஸ்தியாக இருக்கிறது என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி வேஸ்டேஜ் குறைவதற்காக அதிகமான சப்-ஸ்டேஷன்ஸ் திறந்தால், வேஸ்டேஜ் குறையும் என்ற கருத்து இருக்கிறதே, அப்படியானால், அந்த முறையிலே சப்-ஸ்டேஷன்ஸ் அமைக்கப் படுவதற்காக ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, மாஸ்டர் பிளானுகை ரூ. 50 கோடிக்கு ஒரு திட்டம் உரு வாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, டிஸ்டிரிபியூஷன் வோல் டேஜை இன்கிரீஸ் பண்ணுவதற்காக ரூ. 10 கோடி செலவு செய்ய லாம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பரமக்குடியில் மின்வாரிய அலுவலகக் கட்டடம்

*478 வினா—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

பரமக்குடியில் மின் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பரமக்குடியில் ரூ. 2,65,000 செலவில் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. தொ. க. சிறைமீட்டான் :** பேரவைத் தலைவரவர்களே, 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால், பரமக்குடியில் ரூ. 4 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதி இன்னும் மதுரையிலேயே இயங்கிக்கொண்டு வருகிறது. தற்பொழுது கட்டப்பட்டு வரும் கட்டிடத்தில் மதுரையில் இருக்கும் பகுதியை யும் இணைக்க உத்தேசம் இருக்கிறதா ? இல்லாவிட்டால், அதையும் இணைத்து அலுவலகம் ஒரே இடத்தில் அமைத்துத்தர அரசு உத் தேசிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அந்த அலுவலகம் போதவில்லை என்று சொல்லித்தான் அதை விஸ்தரிக்க வேண்டுமென்ற நோக்குடன் ரூ. 2,65,000 செலவில் பரமக்குடியில் அந்தக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று ஏற்கனவே நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. அவையுரிமைப் பிரச்சினை

**உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன், தான் ஒருவருக்கு எழுதாத கடிதத்தை எழுதியதாக மாண்புமிகு முதலமைச்சர் பேரவையில் படித்தது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த உரிமைப் பிரச்னையை இங்கே எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை முதலில் படித்து விடுங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டப் பேரவையின் விதி 184-ன் கீழ் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவர விரும்புகிறேன்.

27—11—1973-ம் நாளன்று 1973-74-ம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளிக்கும் போது மாண்புமிகு முதல் அமைச்சர் நான் ஒரு கடிதத்தை 22—12—1968-ஆம் தேதியன்று ஒருவருக்கு எழுதியதாக அவையில் படித்துக் காட்டினார். அந்தக் கடிதம் என்னால் எழுதப்பட்டது அல்ல. அதில் குறிப்பிட்டுள்ள வாசகங்களில் முரண்பாடுகள்